சென்னை மாநகரில் மின் கட்டமைப்பை மேம்படுத்த கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் 230/33 கிவோ துணை மின் நிலையம் அமைக்கும் பணி தமிழக முதல்வர் அவர்களால் 13.5.2023 அன்று துவங்கப்பட்டது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு 3.11.2023 அன்று நடைபெற்றது. இத்துணை மின்நிலையம் அமைவதால் கணேஷ் நகர், நேர்மை நகர், கொளத்தூர், பெரியார் நகர் மற்றும் விநாயகபுரம் பகுதிகளை சேர்ந்த சமார் 3.19 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.ஆய்வில் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , மின் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி மற்றும் உயர் அதிகாரிகள், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் கழகத் தலைவர் அவர்கள் மீது பற்று மிக்கவர் திருவாரூர் பகுதியின் கழக மூத்த முன்னோடி, அண்மையில் மறைந்த பெரியவர் புலிவலம் ஆர்.பி.சுப்பிரமணியன் அவர்களின் திருவுருவப்படத்தை திருவாரூர் விளமல் பகுதியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் மற்றும் கழக நிர்வாகிகள். சுப்பிரமணியன் குடும்பத்தினர் உள்ளனர்.

முதல்வரின் கனவுத் திட்டமான வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக

இளைஞர்களுக்கு கூடுதல் வசதிகளை மேம்படுத்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, நவ. 5 -

முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்து வதற்கா கவும் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" அமைப்பது தொடர்பாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு .

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக இன்று (4.11.2023) சென்னை, நம்மாழ்வார்பேடை, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பிலும் வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" அமைப்பது தொடர்பாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (03.11. 2023) சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 20232024 ஆம் ஆண்டு அறிவித்த திட்டமான ரூ.1000 கோடி மதிப்பீட்டில் "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" குறித்து சம்மந்தப்பட்ட துறை அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இன்று (4.11.2023) சென்னை, நம்மாழ்வார்பேடை, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்கா கவும் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க ஓர் திட்டம். அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்கக்கூடிய பாலிடெக்னிக், ஐ.டி.ஐ போன்ற படிப்புகள் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாகும். இப்பாலிடெக்னிக் கல்லூரியில் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகள், அடிப்படை தேவைகள், மாணவர்கள் பயிலும் வகுப்பறைகளை மேம்படுத்துதல், அதற்குண்டான உபகரணங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்றவைகள் குறித்து இன்றைக்கு துறை சார்ந்த செயலாளர் சி.சமயமூர்த்தி, , உறுப்பினர் செயலாளர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா அவர்களும், சட்ட மன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆணையாளர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களும், அதேபோல் ஐஏஎஸ் அதிகாரிகள் திருமதி.திவ்யா. மாநகராட்சி ஆர்டிசி சென்ட்ரல் பிரவீன் அவர்களுடனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொழில் பயிற்சிக்காக திறன் மேம்பாட்டு சார்பில் தையல் பயிற்சியும், கணினி பயிற்சியும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இப்பாலிடெக்னிக் கல்லூரியில் தொடங்குவதற்கு இக்கல்லூரி முதல்வர் உறுதியளித்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே அதிகமாக மக்கள் வசிக்கின்ற பகுதி என்பதால் பயனுள்ள ஒரு செயலாக இந்த செயல் அமையும் என்பது நம்பிக்கையோடு இருக்கிறோம். இந்த தொழில் பயிற்சிக்கு வருபவர்களுக்கு தொழில் பயிற்சி முடித்தவுடன் சான்றிதழும், தொழில் பயிற்சி வருகின்றவர்களுக்கு ஊக்க தொகையும் வழங்கபட இருக்கின்றது. அதுவே இது ஒரு அரிய வாய்ப்பாக பயன்படுத்தி இந்த பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவோடு இந்த பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட இருக்கின்றன.

மேலும் இந்த பாலிடெக்னிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தி தர முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. துறை சார்பில் தருகின்ற நிதியையும், அதேபோல் கூடுதலாக சி.எஸ்.ஆர். பணத்தையும் (CSR Fund) பெற்று இந்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இருக்கிறோம். இந்த கட்டித்திலேயே இருக்கின்ற இந்த கேம்பஸ் 5.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் என்பதால் பயன்பாட்டில் இல்லாத இடத்தில் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவைப்படுகின்ற கட்டமைப்புகளை உருவாக்கவும் திட்டமிட்டு இருக்கிறோம். இன்றைய ஆய்வின் தொடர்ச்சியாக இம்மாதம் நவம்பர் 13, 14, 15 ஆகிய மூன்று தேதிகளில் ஏதாவது ஒரு தேதியில் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, திரு.வி.க.நகர் சட்ட மன்ற உறுப்பினர் தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ் குமார், கல்லூரி முதல்வர் திருமதி. பெ.பவானி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் ருத்ரமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில்

"நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபாதை திட்டம்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல் நவ 5

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பான வகையில் பொதுமக்கள் நலன் கருதி செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பொதுமக்கள் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்காக 8 கி.மீ தூரம் நடைப்பாதை கண்டறியப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் துவங்கி மோகனூர் சாலை வழியாக டிரினிட்டி கல்லூரி வரை சென்று திரும்பவும் நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் வந்தடையும் வண்ணம் 8 கிலோமீட்டர் தொலைவிற்கு "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபாதை திட்டத் துவக்க விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு இத்திட்டத்தை துவக்கி வைத்து பேசினார். அப்போது, உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி 10,000 அடிகள் அதாவது 8 கி.மீ நடப்பதால் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்கள் 28 சதவீதமும், இதயநோய் தாக்கம் 30 சதவீதமும் குறைகின்றது என்று அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. இந்த நடைப்பயிற்சி சிறியவர்கள் முதல் முதியோர்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், இப்பகுதியை வாரத்தின் அனைத்து நாட்களும் நடைபயிற்சிக்கு பயன்படுத்தி "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் நோக்கில் அனைவருக்கும் நலவாழ்வு பேணுவதற்கான நடைப்பயிற்சி பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும். இத்திட்டத்தை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி உடல் நலத்தை பேணி காக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நடைபயிற்சியில் நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.ச.பூங்கொடி, மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.கோகிலா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் முருகன் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டனர் .

பெரம்பலூரில் ரூ.25 லட்சம் செலவில்

நரிக்குறவர்கள் 25 ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் திருமணம்!

ஆ.இராசா. எம்.பி. நடத்தி வைத்தார். குன்னம் சி இராஜேந்திரன் - எம். பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ 5 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த 25 ஜோடிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்களை தனது சொந்த செலவில் வழங்கி திருமணம் செய்து வைத்தார் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.

ஜே.கே.மகால் திருமண மண்டபத்தில் சீர்திருத்த திருமணத்தை நடத்தி வைத்து அவர் பேசியது வருமாறு:-

திருநங்கைகள், நரிக்குறவர்கள் உள்ளிட்ட விளிம்பு நிலையில், ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்கு சமத்துவம் வர வேண்டும் என்பதற்காக திட்டங்கள் கொண்டு வந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

தற்போது திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது.

"ஜெய்பீம் 'சினிமா பார்த்துவிட்டு அந்த படத்தில் வரும் காட்சிகளில் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்று நினைத்து,தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

நரிக்குறவர்கள் வீட்டிற்கு சென்று குறைகளை தீர்த்து வைக்கிறார். வேலை வாய்ப்பு, பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார்.

நரிக்குறவர்கள் மக்களுக்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருவதாக கூறிய அவர், வரும் காலங்களில் நரிக்குறவ மக்கள் தி.மு.க.விற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா.எம்.பி. பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இர.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ். பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெக தீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம். ரெங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ர மணியன், மா.பிரபாகரன்,ஆர்.அருண், தொ.மு.ச. பேரவை மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி,

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க. ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர்கள் ரகமத்துல்லா, நல்லுசாமி, சித்தார்த், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், கிருஷ்ணாஇள, ராகவி ரவிக்குமார்,தமிழ்வேந்தன், அ.இளையராஜா,

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் கோபி கிருஷ்ணா,

நரிக்குறவர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர்

மலையப்ப நகர் ஆர். சிவக்குமார், எறையூர் பகுதி நரிக்குறவர்கள் நம்பியார், பாபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பழங்குடியினர் மாநில தலைவர் அதியமான் நன்றியுரையாற்றினார்.

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் நீட் விலக்கு நம் இலக்கு எனும் கையெழுத்து இயக்கம் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் ஏற்பாட்டில் 51வது வட்டத்தில் நடைபெற்றது.மாவட்டச் செயலாளர் தா. இளையஅருணா, ஐடரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். இதில் தா.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், லோ.மோகன்,வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதீஸ்குமார்,ஜி. உமாபதி, எஸ்.குமார்,எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, ஐ.சி.எப்.பழனி, வி.குமார்,என்.பாரி, கே.நாட்டாமை, யு.அனிபா, கே.எஸ்.குமார், கே.மணிகண்டன், தா.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர். வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1வது வட்டம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாமில் புதிய வாக்காளர் சேர்ப்பை தொகுதியின் சட்டமன்றபார்வையாளரும் மாநில இலக்கிய அணியின் துணைச் செயலாளருமான அ.திராவிடமணி பார்வையிட்டார். உடன் மேயர்என்.தினேஷ்குமார். பகுதிச்செயலாளர் இராமதாஸ், வட்டக்கழக செயலாளர் மகேந்திரன் மற்றும் BLA2 BLC.உறுப்பினர்கள் உள்ளனர்

கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க செயற்குழு கூட்டம்!

தஞ்சாவூர் நவ.5.

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணி மாநாட்டிற்கு அதிகபடியான இளைஞர்களை மேற்கு ஒன்றியத்திலிருந்து கலந்துக்கொள்ள செய்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கும்பகோணம் மேற்கு ஒன்றியம் செயற்குழு கூட்டம், ஆரியப்படைவீடு ஊராட்சி, பெரியார் நினைவு சமத்துவபுரம் திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் யு.எஸ்.ஆர்.லோகநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கும்பகோணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளரும், தஞ்சை மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான பம்பப்படையூர் எஸ்.கே.முத்துசெல்வம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் டி.எஸ்.சண்முகம் டி.தியாகராஜன் எ.அனிதாசெல்வராஜ் ஒன்றிய பொருளாளர் சி.இளங்கோ மாவட்ட பிரதிநிதி ஆர்.வி.மணிவாசகம், ஆர்.அன்பழகன் பேரூர் கழகச் செயலாளர் எஸ்.எம்.எஸ். பாலசுப்ரமணியம் சோழநாடு கூட்டுறவு சங்க துணை தலைவர் சூரியமூர்த்தி, தங்க வேலு ,பாண்டியன் பகுதி கழக பொறுப்பாளர்கள் கோவிந்தராஜ், சசிகுமார், வைக்கம் மற்றும் ஒன்றிய, பேரூர் வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள் , சார்பணி நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.எல்.சி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் பணியை தீவிரமாக செய்வது எனவும்,, 2024 ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அரும்பாடுபட்டு கழக வெற்றிக்கு பாடுபடுவது எனவும், வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற உள்ள மாநில இளைஞரணி மாநாட்டிற்கு கும்பகோணம் மேற்கு ஒன்றியத்திலிருந்து அதிகபடியான இளைஞர்களை கலந்துக்கொள்ள செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்பத்தூர் வடக்கு பகுதி பாக நிலை முகவர்களின் (BLA2) ஆலோசனைக் கூட்டம் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் ,வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் கலந்துகொண்டு (BLA2) பாகநிலை முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, வட்ட கழக செயலாளர்கள் வெ.இராதாகிருஷ்ணன், ரவீந்திரன், பு.வீரா, மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல், பகுதி நிர்வாகிகள் கா.கதீஜா, மா.இரமேஷ், க.பொற்கொடி கலந்து கொண்டார்கள். மேலும் இக்கூட்டத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி வட்டம் 79,79அ, 80, 81, 85, 86 பாக நிலை முகவர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.